**கவனிக்க.-** *2018.09.28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2092 - 2018 ඔක්තෝබර් මස 05 වැනි සිකුරාදා - 2018.10.05

*2092 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 188 |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 189 |


**கவனிக்க.-** (i) தேயிலை ஆராய்ச்சி சபை (திருத்தம்) சட்டமூலம் 2018, செத்தெம்பர் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) கம்பனிகள் (திருத்தம்) சட்டமூலம் 2018, செத்தெம்பர் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2018, ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

187-B81455-353 (2018/10)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## மாரவில மாவட்ட நீதிமன்றம்

பிசுக்கால் ஏலத்தில் விற்பனை செய்தல்

**198/MB ஆம் இலக்க வழக்குடன் தொடர்புடைய மாரவில மாவட்ட நீதிமன்றின் பிசுக்கால் மூலம் செய்யப்படுகின்ற பெறுமதியான ஆதனம் ஒன்றினை பிரசித்த ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்தல்**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில காணிப் பதிவகப் பிரிவிற்கு உட்பட்ட, தெற்கு பிடிகல் கோரளை, ஓதர பிரிவு, வென்னப்புவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, தன்கொடுவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, மொடேமுள்ள கிராம அலுவலர் பிரிவுக்குள் அமைந்துள்ள, மொடேமுள்ள மற்றும் எடியாவல என்ற கிராமங்களில் அமைந்துள்ள "எடியாவல எஸ்டேட்" என்று அழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு. யூ. எஸ். கே. எதிரிசிங்ஹ அவர்களால் 2011.02.13 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 2408 ஆம் இலக்க வரைபடத்தின் 4 ஆம் இலக்க காணித்துண்டு. பரப்பளவு 00ஏ. 00றூ. 20.00 பே. காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை மற்றும் கட்டிடங்கள் அனைத்தும் அடங்களாக. 3956 ஆம் இலக்க வரைபடத்தின் 4 ஆம் இலக்க காணித்துண்டை பொது பாதையாகப் பாவிக்கும் உரிமையுடன். இது மாரவில காணிப்பதிவகத்தில் E. 185/28 இன் கீழ் பதியப்பட்டுள்ளது.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை**:- தங்கொவுவயிலிருந்து பன்னல பாதையில் 2.5 கிலோ மிற்றர் அளவு சென்றவுடன் அகப்படும் தலுவெல சந்தியால் அமாஹொட்டிமுள்ள பாதையில் 01 கிலோ மீற்றர் அளவு சென்றவுடன் மயானத்துக்கு முன்னதாக பாதையின் வலது பக்கமாக இருக்கும் கிளைப் பாதையில் இரண்டாவது காணி இந்த ஆதனமாகும்.

2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு, ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பிரதி பிசுக்கால் மூலம் ஏல விற்பனை செய்யப்படும்.

**பணம் செலுத்தும் முறை**.- ஏல விற்பனையின் இறுதியில் ஆதனத்தை வாங்கியவர் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பணத்தைச் செலுத்தல் வேண்டும்.

(1) வாங்கிய விலையின் (நூற்றுக்கு இருபத்தி ஐந்து) 25%;
(2) மாகாண அதிகார சபையின் வரியாக 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) பிசுக்கால் கமிஷனாக சிவில் நடைமுறைச் சட்டத்தின் 258 ஆம் பிரிவின் பிரகாரம் கமிஷன் பணம்;
(4) அனைத்து விளம்பரக் கட்டணங்கள் ;
(5) எழுதுவினைஞர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500;
(6) விற்பனைச் செலவுகள், வேறும் கட்டணங்கள் இருப்பின் அந்தப் பணம்;
(7) விற்பனை அத்தாட்சிப் பத்திரத்துக்கான முத்திரை வரி.

- குறிப்பிட்ட ஆதன விற்பனை நீதிமன்ற அங்கீகாரத்துடன் நடைபெறுகின்றது.

வாங்கிய விலையின் மிகுதி 75% மான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

மேற்கண்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட முழுத் தொகையையும் செலுத்தாவிடின் ஏற்கனவே செலுத்திய பணத்தை திருப்பிச் செலுத்தாமல் விடவும். மீண்டும் ஆதனத்தை ஏலவிற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

உரிமைப் பத்திரம் வேறு விபரங்களை பரிசீலிப்பதற்கும் மேலதிக விபரங்களையும் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய பிரதான அலுவலகம், (முதலாம் மாடி), இல. 79, மாரவில வீதி, நாத்தாண்டிய என்ற முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

தொலைபேசி : 032-2253300, 032-2253301
பெக்ஸ் : 032-2255247

பதிவாளர்/பிரதி பிசுக்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
மாரவில.

மாவட்ட நீதிமன்றம்,
மாரவில.

10-170

# நானாவித அறிவித்தல்கள்

## அறிவித்தல்

### குடியியல் நியாயாதிக்கத்தைக் கொண்ட மேல் மாகாண மேல் நீதிமன்றம்

(கொழும்பில் அமையப்பெற்றது)

இல. 390/13 வரகொட வீதி, களனியில் அமைந்துள்ள போட்டோ கிராபிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் விடயத்திலும்

மற்றும்

ஒடுக்குவதற்கான விண்ணப்ப இலக்கம் : 71/2018/CO

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் கீழ் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான ஓர் விண்ணப்பம்

ரெயின் செக்யுரிட்டி சேவிசஸ் (REIGN SECURITY SERVICES) (PVT) LTD.,
“வாதுல”, மாதம்பே வீதி, உடுபத்தவ.

மனுதாரர்

மேற்கூறப்பட்ட கம்பனியை மேல் மாகாண மேல் நீதிமன்றத்தினால் (கொழும்பில் அமையப்பெற்றது) ஒடுக்குவதற்கான மனு 2018 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 31 ஆந் திகதி.

ரெயின் செக்யுரிட்டி சேவிசஸ் (REIGN SECURITY SERVICES) (PVT) LTD.,
“வாதுல”, மாதம்பே வீதி,
உடுபத்தவ.

நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்றும்

மேற்குறித்த மனுவானது, 2018, நவெம்பர் மாதம் 27ஆந் திகதி நீதிமன்றத்துக்கு முன் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளதென்றும், மேற்குறித்த மனு சம்பந்தமாக மேற்குறித்த கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது, குறித்த மனு தொடர்பில் கட்டளை பிறப்பிப்பதை ஆதரவு அல்லது எதிர்க்க விரும்பின் விசாரணையின்போது நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அக்காரணத்திற்காக பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும் மேற்படி கம்பனிக்கு எந்தவொரு கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்குத் தேவைப்படின். மனுவின் ஒரு பிரதி கீழ் கையொப்பமிடப்பட்டவரினால் அதற்குரிய கட்டணத்தின்படி பணக்கொடுப்பனவின் பிரகாரம் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

திரு. ஏ. பிரேமலிங்கம்,
மனுதாரரின் சட்டத்தரணி,
11-5/2, புனித லோரென்ஸ் வீதி,
கொழும்பு - 06.

**குறிப்பு**.- மேற்குறித்த மனுவின் விசாரணையின்போது நேரில் சமுகமளிக்க எவராவது நோக்கம் கொள்வாதாயின் அவர் அதனின் நோக்க அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணியான திரு. ஏ. பிரேமலிங்கம் அவர்களுக்கு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சேர்ப்பிக்க வேண்டும். குறித்த அறிவித்தல் நபர்களின் பெயர்கள் மற்றும் விலாசங்கள் அல்லது கம்பனியாக இருப்பின் கம்பனியின் பெயர் மற்றும் விலாசம் அல்லது அவர்களுக்கு/அவருக்கு பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி இருப்பின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியின் பெயர் என்பவற்றைக் குறித்து மேற்குறித்தவருக்கு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் போதியகால அவகாசத்துடன் கிடைக்கக்கூடியதாக 2018, நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி பி.ப. 6.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

திரு. ஏ. பிரேமலிங்கம்,
மனுதாரரின் சட்டத்தரணி.

10-32

## ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

### மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

(அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் (கொழும்பில் நடைபெறுகின்றது)

இல. 211, ஜயந்தி மாவத்தை, (சமாந்தர வீதி), மஹவஸ்கடுவ வடக்கு, வஸ்கடுவ என்ற முகவரியில் பதிவு செய்த அலுவலகத்தைக் கொண்ட (பீவீ 73584) க்லப் வஸ்கடுவ பீச் (பிரைவேட்) லிமிட்டட் [Club Waskaduwa Beach (Private) Limited] நிறுவனத்தின் விடயம்

வழக்கிலக்கம் : HC (Civil) 70/2018/CO
தன்மை : ஒடுக்குதல்

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் நியதிகளினாலும் மற்றும் அவற்றின் கீழும் ஒடுக்குவதற்கான ஒரு விண்ணப்பம் தொடர்பான விடயம்.

ஹஸ்ரே இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட் (Hasre Investments Limited) P. O. Box 146, Road Tortola, British Virgin Islands.

மனுதாரர்

குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் (கொழும்பில் நடைபெறுகின்ற) மேல் மாகாண, மேல் நீதிமன்றத்தினால் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கு 2018, செத்தெம்பர் மாதம் 7 ஆந் திகதி P. O. Box 146, Road Town, Tortola, British Virgin Islands என்ற முகவரியைச் சேர்ந்த Hasre Investments Limited நிறுவனத்தினால் ஒரு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தரப்படுகின்றது. அத்தோடு சொல்லப்பட்ட மனுவை 2018, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என்பதோடு அத்தகைய மனுமீது ஒரு கட்டளையை மேற்கொள்வதற்காக சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன் தருனர் அல்லது பங்களிப்புச் செய்பவர் அதனை ஆதரிப்பதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்பினால் அந்த நோக்கத்துக்காக எவரேனும் ஆள் அல்லது அவரது சட்டத்தரணியால் விசாரணையின்போது ஆஜராகலாம் என்பதோடு சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்தருனர் அல்லது பங்களிப்புச் செய்பவருக்கு சொல்லப்பட்ட மனுவின் பிரதியொன்று கையொப்பமிடப்பட்டு அதற்கான குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி வேண்டுவதன் மூலம் வழங்கப்படும்.

எப். ஜே. என்ட் ஜி. டி. சேரம்,
216, டி சேரம் பிளேஸ்,
கொழும்பு - 10.

**குறிப்பு**.- சொல்லப்பட்ட மனு மீதான விசாரணையில் தோன்றுவதற்கு விரும்புகின்ற எவரேனும் ஆள், அவரின் விருப்பத்தை எழுத்து மூலம் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட எப். ஜே. என்ட் ஜி. டி. சேரம் நிறுவனத்துக்கு சேர்ப்பிக்க அல்லது தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அத்தகைய அறிவித்தல் ஆளின் பெயர், முகவரி அல்லது நிறுவனம் ஒன்றாயின் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு குறிப்பிட்ட ஆளினால் அல்லது நிறுவனத்தால் அல்லது அவரின் அல்லது அதன் சட்டத்தரணியால் (எவரேனும் இருந்தால்) கையொப்பமிட்டு சேர்ப்பிக்க வேண்டும் அல்லது தபால் செய்யப்பட்டால் உரிய நேரத்தில் 2018, நவெம்பர் 27 ஆந் திகதிக்கு முன்னைய நாள் மாலை 6.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக மேலே பெயர் குறிப்பிட்ட நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

10-49

---

## சிறுவர் அபிவிருத்தி லங்கா நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

கவீந்திரன் கோடீஸ்வரன் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், "சிறுவர் அபிவிருத்தி லங்கா நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(அ) சிறுவர் அபிவிருத்தி கருதி சுகாதாரம், புனர்வாழ்வு, பராமரிப்பு போன்ற சேவைகளை வழங்குதலும் நோய் வாய்ப்பட்ட மற்றும் ஆற்றலற்ற சிறுவரின் இல்லங்களிலேயே அவர்களைப் பேணுதல் சேவையொன்றை மேற்கொள்ளல்;

(ஆ) சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், சுகாதார நிலையங்கள் போன்றவற்றை நிறுவுதலும் சிறுவரின் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தலும்;

பிறவும்.

கவீந்திரன் கோடீஸ்வரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
திகாமடுல்லை மாவட்டம்.

10- 136

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து** மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2018**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 05.10.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.09.2018 |
| | | வெள்ளி | 12.10.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.09.2018 |
| | | வெள்ளி | 19.10.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.10.2018 |
| | | வெள்ளி | 26.10.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.10.2018 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 02.11.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.10.2018 |
| | | வெள்ளி | 09.11.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.10.2018 |
| | | வெள்ளி | 16.11.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.11.2018 |
| | | வெள்ளி | 23.11.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.11.2018 |
| | | வெள்ளி | 30.11.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.11.2018 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 07.12.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.11.2018 |
| | | வெள்ளி | 14.12.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.11.2018 |
| | | வெள்ளி | 21.12.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.12.2018 |
| | | வெள்ளி | 28.12.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.12.2018 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.